1973 டிசம்பர் 4]

கரிம உரம்

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கரிம உரத்தை **(Organic Manure)** அதிக அளவில் பயன் படுத்துவதற்கான இயக்கம் ஏதும் இம்மாநிலத்தில் நடத்தப் பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தப் பஞ்சாயத்து அதிக கம்போஸ்ட் உரம் தயாரிக்கிறதோ, அதற்கு ரூபாய் 250 பரிசு அளிக்கப் பட்டு வருகிறது.

Labour Courts

*** 200 Q.—Thiru KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Labour be pleased to state—**

(*a*) whether any representation has been received by the Government about the hardships experienced by the Labour Unions and Labourers due to the shifting of Labour Courts from High Court, Madras to Nungambakkam ; and

(*b*) if so, the steps taken thereon by the Government ?

தொழிலாளர் நீதி மன்றங்கள்

திரு. காட்டூர் கோபால் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொழில் நீதி மன்றம், சென்னை உயர் நீதி மன்றத்தில் இருந்து வந்தது மாற்றப்பட்டு தற்போது நுங்கம்பாக்கத்தில் உள்ளதால், தொழிற் சங்கத்தினருக்கும், தொழிலாளர்களுக்கும் மிகவும் சிரமமாக உள்ளது என்று முறையீடுகள் ஏதேனும் வரப்பெற்றுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) அனைத்து இந்திய தொழிற்சங்கக் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. கே. எம். சுந்தரம் கருத்துத் தெரிவித்ததன்படி நுங்கம்பாக்கத்திலிருந்து தொழிலாளர் நீதி மன்றங்களை வட சென்னையில் மையப் பகுதியில் அமைந்துள்ள ஒரு கட்டிடத்திற்கு மாற்றுவது பற்றி 1973 ஜூலையில் குற்றாலத்தில் நடை பெற்ற மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் 26-வது கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. விவாதத்தின் போது, இது பற்றி உயர் நீதிமன்றத் துடன் கலந்தாலோசித்துப் பரிசீலிக்க ஒப்புக் கொள்ளப்பட்டது. பின்னர், உயர் நீதிமன்றத்துடன் இதுபற்றிக் கடிதத் தொடர்பு கொள்ளப்பட்டது. உயர்நீதி மன்றத்தைச் சுற்றியுள்ள பகுதியில் தகுந்த தோர் கட்டிடத்தை ஏற்பாடு செய்யும் முயற்சியில் உயர்நீதிமன்றம் தற்போது ஈடுபட்டுள்ளது.

திரு. காட்டூர் கோபால் : தலைவரவர்களே, தற்போது நடைபெற்று வருகின்ற இந்தத் தொழில் நீதிமன்றக் கட்டிடத்தில் மூன்று தொழில் நீதிமன்றங்கள் அமைந்து விசாரணை நடத்துகின்ற காரணத்தால், தொழில் தகராறுகள் விரைவில் தீர்வு செய்யப்படாமல் இருக்கின்றன. இதற்கு அரசு உடனடியாக ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இதிலே உள்ள சிரமங்களை இந்த இலாகாவினர் அறிந்திருக்கிற காரணத்தால் பல கட்டிடங் களைப் பார்த்தார்கள். நீதிமன்றங்கள் வைப்பதற்கான வகையில் அந்தப் பகுதியில் கட்டிடங்கள் கிடைக்கவில்லை. ஆகையினால் இப்பொழுது உள்ள நீதிமன்றக் கட்டிடத்திற்குள்ளேயே ஒரு கட்டிடம் கட்ட முயற்சி மேற் கொள்ளப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Mr. Chairman : Questions 191 and 192 are postponed.

Questions are over.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதை குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) அரசு உறுதிமொழிக் குழுவிற்கு உறுப்பினர் நியமனம்.

Mr. CHAIRMAN : I have to announce to the House that under Rule 175 (1) of the Tamil Nadu Legislative Council Rules, I have nomi-